[2010 நவம்பர் 11

23—

மையம்

***25888-திரு. வி.எஸ். பாபு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுனாமி, பூகம்பம் வருவதை அறியும் மையம் ஒன்றை சென்னையில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுனாமி, பூகம்பம் வருவதை முன்கூட்டியே தகவலளிக்கும் மையம் ஆந்திர மாநிலம், ஹைதராபாத்தில் மைய அரசால் 15-10-2007 அன்று (Indian National Centre of Ocean Information Services (INCOIS), அமைக்கப்பட்டுள்ளது. இது சுனாமி, பூகம்பம் வருவதை இன்றுவரை தமிழ்நாடு உட்பட இந்தியா முழுவதற்கும் தகவல்கள் தந்து கொண்டிருக்கின்றது. எனவே, தமிழ்நாட்டில் இதுபோன்ற மையம் அமைப்பது குறித்து தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதி மக்களுக்கும், மீனவ மக்களுக்கும் இன்று இந்தியாவே வியக்கும் வண்ணம், இரவு-பகல் பாராமல் உழைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், துணை முதல்வர் தளபதி அவர்களின் சீரிய முயற்சியால், சுனாமிக்கென தனித் துறை ஏற்படுத்தப்பட்டு சுனாமி குடியிருப்பு, சுனாமி பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாலங்கள், சாலைகள், சிறிய துறைமுகங்கள் சீரமைப்பு என பல வழிகளில் இயற்கைச் சீற்றங்களினால் ஏற்பட்ட இழப்புகள் சரி செய்யப்பட்டு வருகின்றன. அதற்காக மாண்புமிகு முதல்வர் அரசை தமிழக மக்கள் மனதாரப் பாராட்டுகின்றார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் தமிழகக் கடலோர மாவட்டங்களில் சுனாமி வருவதற்கு முன்பாக கடற்கரை ஓரங்களில் சுனாமி எச்சரிக்கை செய்து, பொதுமக்களுக்கு

2010 நவம்பர் 11]

விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு முன்வருமா? மேலும், இனிவரும் காலங்களில் சுனாமி தடுப்பு நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ள நகரங்கள், கிராமங்களில் சுனாமி எச்சரிக்கை மையங்கள், சுனாமி எச்சரிக்கை ஒலிபெருக்கிக் கருவிகள் பொருத்திடவும் மற்றும் மீனவர்களுக்கு சுனாமி எச்சரிக்கை wireless போன்ற கருவிகள் வழங்கிடவும், தலைவர் கலைஞர் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி, பூகம்பம் பற்றிய தகவல்களை அனுப்புவதற்காகத்தான் இந்திய அரசு Indian National Centre of Ocean Information Services என்று அந்த மையத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இதைப் பொறுத்த அளவில் இந்தியாவிற்கே ஹைதராபாத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற மையம்தான் தகவல்களை அனுப்புகின்றது. இங்கே வங்காள விரிகுடாவிலும், நம்முடைய அரபிக் கடலிலும் இந்த மையங்கள் 6 இடங்களிலே ஏறத்தாழ 5 கிலோமீட்டர் ஆழத்திலே ஆய்வுகள் செய்யப்பட்டு, 13 நிமிடங்களிலே, 5 கிலோமீட்டர் ஆழத்திலே ஏற்படுகின்ற நில அதிர்வு மாற்றங்களை ஆராய்ந்து, அதனால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை உடனுக்குடனே satellite மூலமாக இந்தியா மட்டுமல்லாமல், உலக அளவிலே அத்தனை பகுதிகளுக்கும் அனுப்புகின்ற பணியை இது செய்து வருகின்றது. இந்த மையத்தைப் பொறுத்த அளவில் உலக அளவிலே 3 இடங்களில்தான் பெருமளவில் அமைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இந்தியாவிலே ஹைதராபாத்திலும், அதேபோல் இந்தோனேஷியாவிலும் மற்றும் ஆஸ்திரேலியாவிலும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இங்கு அமைக்கப்பட்டிருக்கின்ற மையத்திற்கு, நமக்குத் தகவல்களைத் தந்தவுடனே, அங்கே அறியப்பட்டவுடனே, அந்த மையத்திலிருந்து இங்கே தகவல்கள் பெறுவதற்கு satellite மூலமாக 1,000 இடங்களிலே கடலோரப் பகுதிகளில் உள்ள அத்தனை பகுதிகளிலும் சுனாமி அறிவிப்பு, கடலில் ஏற்படக்கூடிய மாற்றங்களைத் தெரிவிப்பதற்காக வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

மீனவர்களைப் பொறுத்த அளவில் கடல் அலைகளை வைத்து அதை ஆய்வு செய்வதற்காக இங்கேயே நம்முடைய கடலோரப் பகுதிகளிலே, சென்னையாக இருந்தாலும், எண்ணூராக இருந்தாலும், கடலூராக இருந்தாலும், நாகப்பட்டினமாக இருந்தாலும், தூத்துக்குடியாக இருந்தாலும் அல்லது புதுச்சேரியாக இருந்தாலும், அந்தப் பகுதிகளிலே கடல் அலைகளினுடைய அந்த அதிர்வுகளை வைத்து புயல் எச்சரிக்கைகளை உடனே மீனவர்களுக்குத் தெரிவிப்பதற்கும், சுனாமி பேரிடரிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காகத் தகவல்களை உடனே தெரிவிப்பதற்கும் இங்கேயே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது தமிழகத்திலே அந்த மையம் அமைக்கும் எண்ணம் இல்லை. கடல்சார் ஆராய்ச்சி மையத்தைப் பொறுத்த அளவில் அது முழுக்க மத்திய அரசால் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற புவியியல் ஆராய்ச்சி மையம், அறிவியல் ஆராய்ச்சி மையம். அங்கே இருக்கக்கூடிய உள் துறை இந்த மையத்தை நிர்வகித்து வருகின்ற காரணத்தினால், அந்த வாய்ப்பு மத்திய அரசுக்குத்தான் இருக்கின்றது. வேண்டுமானால் எதிர்காலத்திலே மத்திய அரசை நாம் கேட்டுக்கொள்ளலாம்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் சூழ்ந்த மாநிலமாகத் தமிழகம் உள்ளதால், தமிழகத்தில் வேறு மையங்கள் அமைப்பதற்கான உத்தேசம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இல்லை என்பதை நான் ஏற்கெனவே ஆரம்பத்திலே தெரிவித்திருக்கிறேன். ஹைதராபாத்திலே இருக்கக்கூடிய இந்த ஆய்வு மையம்தான் இன்றைக்குத் தகவல்களை நமக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, அதிலே ஒன்றும் இப்போது பிரச்சினைகள் இல்லை. மிகத் தெளிவாக அந்த வினாடியே நமக்குத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

2010 நவம்பர் 11]

13 நிமிடங்களிலே ஆய்வு செய்யப்பட்டு, அதிர்வுகள் எந்த அளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும், பூகம்பமோ அல்லது ஏற்படக்கூடிய சுனாமியோ, கடலில் ஏற்படக்கூடிய மாற்றங்களோ அவற்றை உடனே தெரிவிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய தொலை தொடர்பினுடைய வசதிகள் காரணமாக ஒவ்வொரு இடத்திலும் மையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. காரணம், இது வங்காள விரிகுடா, அரபிக் கடல், அத்தனை கடல்களையும் இணைக்கின்ற வகையாக இருக்கின்றது. வங்காள விரிகுடா கிட்டத்தட்ட நம்முடைய மாநிலத்தில் முழுமையாக வருகிறது. அதனால் அந்த மையத்தை இங்கே ஏற்படுத்துவதற்கு அவசியம் ஏற்படாது என்று நான் கருதுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

திரு. வி.பி. கலைராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே கடல் பகுதி அதிகமாக இருக்கிற மாநிலம் நமது தமிழகம். ஆக, தமிழகத்தில் நீங்கள் சுனாமி வந்ததற்குப் பிறகு ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். சுனாமி வந்தபோது ஆட்சியில் இருந்தவர் எங்கள் அம்மா. அவர் எடுத்த நடவடிக்கையைப் பார்த்து அமெரிக்காவிலிருந்து வந்த முன்னாள் அதிபராக இருந்த, திரு. பில் கிளிண்டன்கூட வெகுவாக தமிழக அரசையும் பாராட்டி, எங்கள் அம்மாவையும் பாராட்டிவிட்டுச் சென்றார், இது கடந்தகால வரலாறு. வெகுவாக என்று ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், அந்த அளவிற்கு, சிறந்த administration, very good administration என்பதற்காக வாழ்த்திவிட்டுச் சென்றிருக்கிறார். எனவே, இங்கே அமைச்சர் அவர்கள் ஹைதராபாத்திலே ஒரு centre இருப்பதாகச் சொன்னார்கள். இந்தோனேஷியாவிலே அடிக்கடி பூகம்பம் வருகிறது. இந்தோனேஷியாவில் வருவதால் அடிக்கடி பாதிப்பு யாருக்கு வருகிறதென்று சொன்னால்; தமிழ்நாட்டிற்கு வருகிறது. ஆக, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் எல்லாம் சுனாமி வருவதை உடனுக்குடன் அறிவதற்கு வசதி ஏற்படுத்தியிருக்கின்றபோது, விஞ்ஞானத்திலே வளர்ச்சி அடைந்திருக்கின்ற நம்முடைய இந்தியாவிலே, நீங்கள்—அதிலும் குறிப்பாக அதிகம் பாதிக்கப்படக்கூடிய மாவட்டமாக நம்முடைய சென்னை மாவட்டம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே,

சென்னையிலே பாதிப்பு வந்தால் கடுமையாக இருக்கும். எனவே—இதற்கு தக்க நடவடிக்கை எடுத்து, மத்திய அரசிடம் வாதாடி, தமிழகத்திலே அவசியம் சுனாமி, பூகம்பம் வருவதைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு மையத்தை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியைப் பொறுத்த அளவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தரமாக புனரமைப்புத் திட்டத்தை இன்றைக்கு முழுமையாக நிறைவேற்றி சாதனை படைத்திருக்கின்றவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, சுனாமியைப் பொறுத்த அளவில் அவர் சொன்னதைப்போல குறிப்பாக இங்கே கடலில் ஏற்படக்கூடிய மாற்றங்களை அறிய வேண்டுமென்றால் ஹைதராபாத்திலே அமைக்கப்பட்டிருக்கின்ற அந்த மையமே போதுமானது. ஏனென்றால், இங்கே அருகிலே இருக்கக்கூடிய அந்தமானாக இருந்தாலும், சுமத்திரா தீவுகளாக இருந்தாலும், தெற்காசிய நாடுகளான இந்தோனேஷியாவாக இருந்தாலும், ஆஸ்திரேலியாவாக இருந்தாலும் இவையெல்லாம் இணைக்கப்பட்டிருக்கின்றன. எந்தக் கடலில் என்ன மாற்றங்கள் ஏற்பட்டாலும், அதனால் வரக்கூடிய விளைவுகளைத் தெரிவிப்பதற்கு இது போதுமான அளவிற்கு இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலே நமக்கு அந்தச் செய்தியைப் பெறுவதற்கு, அத்தனை கடலோர மாவட்டங்களிலும் அறிவிப்பு செய்வதற்கு, அங்கே இருக்கின்ற மீனவர்களுக்கும், கடலோரத்திலே வாழ்கின்ற மக்களுக்கும் அறிவிப்பு செய்வதற்கு வேண்டிய வசதிகள் அத்தனையும் தமிழகத்திலே செய்யப்பட்டிருக்கின்றன. அதனால், எதிர்காலத்திலே அவசியம் தேவைப்படாது என்றுதான் நான் கருதுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

2010 நவம்பர் 11]

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி, பூகம்பம் ஏற்படுவதைக் கண்டறிவதற்காக ஹைதராபாத்திலே அமைக்கப்பட்டிருக்கிற மையம், அனேகமாக அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் ஆசியா அளவிலே அது அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது இப்பொழுது இருக்கிற தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள் மூலமாகத் தகவல்களை உடனடியாகப் பெற வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே தமிழகத்திற்குத் தேவையில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், இந்தோனேஷியாவிலே தொடர்ந்து பூகம்பம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது, சுனாமி வருகிறது. கடந்த மாதம்கூட அப்படி ஏற்பட்டு, உயிர் இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அதனுடைய தாக்கம் நம்முடைய தமிழகத்தில் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. குறிப்பாக, சென்னையிலே அந்தத் தாக்கம் அதிகமாக இருக்கிறது. நில நடுக்கம் சென்னையில் அடிக்கடி ஏற்படுகிறது. பெரிய அளவில் வரவில்லை என்று ஆறுதல் அடையலாமே தவிர, நில நடுக்கம் ஏற்படுவதற்கும், பூகம்பம் வருவதற்குமான அறிகுறிகள் தென்படுகின்றன. அடிக்கடி அந்தச் செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் தடுப்பதற்கான முயற்சியாக, அந்த ஹைதராபாத் மையம் போதுமான அளவில் இந்தக் காரியத்தை செய்ய முடிகிறதா என்ற அச்சம் எழுகிறது. உலக அளவில் மேலும் முன்னேற்றமான ஒரு சூழ்நிலையிலே கண்டுபிடிப்புகள் செய்யப்பட்டு, அந்தக் கண்டுபிடிப்புப் பணிகள் உலக அளவில் செய்யப்படுகின்றனவா? அதையொட்டி ஹைதராபாத் மையம் செயல்படுகிறதா? இல்லையானால், தேவையான அளவிலே இன்னும் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தி உடனடியாகத் தகவல் தெரிந்து—ஏனென்றால், இப்போது இந்தத் தகவல்கள் 13 நிமிடங்களில் சொல்லப்படுகின்றன. இந்தத் தகவல்களை அரை மணி நேரத்திற்குள் சொன்னால்கூட அங்கே இருக்கிறவர்களை அப்புறப்படுத்த முடியாது. அதற்குள் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன, பொருள் இழப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே—இன்னும் முன்கூட்டியே அறிவதற்கான அந்த வாய்ப்புகளைப் பெறுவதற்கான முயற்சியையும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

[2010 நவம்பர் 11

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி, பூகம்பத்தைப் பொறுத்த அளவில், உலக அளவிலே ஒரே தொழில்நுட்பம்தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன். காரணம், இப்போது கடல்சார் புவி ஆராய்ச்சி அறிவியலைப் பொறுத்தவரையில் மத்திய அரசுதான், அதை நிறைவேற்றி வருகிறது. இந்தியாவைப் பொறுத்த அளவில் இந்தியா வளர்ந்த நாடு என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, இங்கே இருக்கக்கூடிய முழுமையான தொழில்நுட்பத்தினால்தான் எல்லா நாடுகளுக்கும் நாம் தெரிவிக்க முடிகிறது. ஹைதராபாத்தில் இருக்கக்கூடிய ஆராய்ச்சி மையம் ஏதோ தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் மட்டும் பயன்படவில்லை. அண்டையிலே இருக்கக்கூடிய அத்தனை நாடுகளுக்கும் அந்தச் செய்திகளைத் தெரிவிக்கின்ற வசதியை ஹைதராபாத் மையம் பெற்றுள்ளது. 125 கோடி ரூபாய் செலவிலே இன்றைக்கு இருக்கக்கூடிய நவீன தொழில்நுட்பத்தோடுதான் அதை அங்கே நிறுவியிருக்கிறார்கள். இப்போது நாம் என்ன கேட்கிறோம் என்றால், இந்தியாவுக்கே இந்தக் கடலிலே ஏற்படக்கூடிய மாற்றங்களையும் பூகம்பத்தையும் தெரிவிக்கின்ற இந்த மையம் தமிழகத்திலே—அவர் சொன்னதைப்போல, தமிழ்நாட்டில்தான் முழு கடல் பகுதியும் அமைந்திருக்கிறது. இங்கிருந்து கன்னியாகுமரி வரைக்கும் நீண்ட கடல் பகுதி அமைந்திருப்பது, நம்முடைய வங்காள விரிகுடா முழுமையாக இருப்பது நம்முடைய தமிழகத்திலேதான். ஹைதராபாத் என்பது இங்கே பக்கத்தில்தான் இருக்கிறது. பக்கம், தூரம் என்பதெல்லாம் பிரச்சினை இல்லை. இப்போது உலகம் முழுவதும் ஏற்படக்கூடிய மாற்றங்களை inter-connect செய்திருக்கிறார்கள். இந்தச் செய்திகளை முழுவதும் தெரிந்துகொள்ள முடியும். அங்கே என்ன மாற்றங்கள், ஆஸ்திரேலியாவிலே ஏதாவது கடலிலே மாற்றங்கள் ஏற்பட்டால் இங்கே தெரிவிக்கும். இங்கே ஏற்படக்கூடிய மாற்றங்கள் வங்காள விரிகுடாவிலும் சரி, அரபிக் கடலிலும் சரி, ஏற்படக்கூடிய மாற்றங்களை ஒன்றுக்கொன்று தெரிவிக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அது இன்றைக்கு இருக்கக்கூடிய அறிவியல்

தொழில்நுட்பத்திலே முழுமையாக இந்த மையம் நமக்குப் பயன்படுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

பட்டா

***107936-திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரப் பதிவின்போது சொத்து மாற்றம் செய்யப்படும் நிலையிலேயே பட்டா மாற்றமும் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சொத்து மாற்றம் செய்ய பதிவிற்கென பெறப்படும் ஆவணங்கள் பதிவிற்குப் பின்னர் பட்டா மாற்றம் செய்வதற்குரிய பதிவுற்ற ஆவணங்களின் விவரங்களை ஒரு வார காலத்திற்குள் உரிய வட்டாட்சியாளருக்கு அனுப்பப்படுவதுடன், அந்த வட்டாட்சியாளர் தங்களது வருவாய்ப் பதிவேட்டில் சரிபார்த்து உட்பிரிவு செய்து, உடனுக்குடன் பட்டா மாற்றம் செய்கின்றார்.

(ஆ) எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் R.P.T. முறையை இப்போது சொல்லியிருக்கிறார்கள். இந்த முறை தமிழகத்தில பரவலாக எங்கு கேட்டாலும் பின்பற்றப்படவில்லை என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. ஏனென்று சொன்னால்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS